செ.வெ.எண்: 78 நாள்: 28.01.2017

## பத்திரிகைச்செய்தி

## மா சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் கவனத்திற்கு

"மங்கினால் மா, பொங்கினால் புளி" என்ற பழமொழிக்கு ஏற்றவாறு மாமரம் தற்போது பூக்க ஆரம்பித்துள்ளது. மாமரங்களில் உள்ள பூக்களில் இலைதத்துப்பூச்சி (Hopper) தென்படுகிறது. இது பூக்களை சேதப்படுத்தி காய் பிடிப்பதை சேதப்படுத்துகிறது. எனவே இதனைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் என்ற மருந்தினை இரண்டு மில்லியும் இதனுடன் நனையும் கந்தகம் நான்கு கிராம் மருந்தினையும் ஒருலிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்த கலவையினைக் கொண்டு, மரத்திற்கு மருந்து தெளிக்கும் தெளிப்பான் ஆனராக்கர் ஸ்பிரேயர் கொண்டு மரம் முழுவதும் நன்கு நனையும்படி தெளித்து பூக்கள் உதிர்வதைத் தடுத்து, நல்ல மகசூல் பெற்றிட புதுக்கோட்டை தோட்டக்கலை துணைஇயக்குநர் திரு.எஸ்.அருணாச்சலம் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.